## மெட்ரோ ரயில் நிலைய வாகன நிறுத்தக் கட்டணம்

# 'ஸ்மார்ட் கார்டு' மூலம் செலுத்தும் திட்டம் விரைவில் அறிமுகம்

நமது நிருபர்

**சென்னை, மே 22:** சென்னையில் உள்ள அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களிலும் 'ஸ்மார்ட் கார்டு' மூலம் வாகன நிறுத்துவதற்கான கட்டணம் (பார்க்கிங் கட்டணம்) செலுத்தும் திட்டத்தை மெட்ரோ ரயில் நிர்வாகம் விரைவில் தொடங்கவுள்ளது.


கோப்புப்படம்

**தேவை அதிகரிப்பு:** சென்னை மெட்ரோ ரயில்களில் பயணிகளை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கைகளை மெட்ரோ ரயில் நிர்வாகம் எடுத்து வருகிறது. இதுதவிர, பயணிகளுக்கு பல்வேறு வசதிகளை செய்து வருகிறது.

அந்த வகையில், பயணிகள் தங்கள் கார், இருசக்கர வாகனங்களை ரயில் நிலையத்தில் விட்டு சென்று பயணம் செய்ய 'பார்க்கிங்' வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இதற்காக, மெட்ரோ ரயில் நிலையங்களை ஒட்டியுள்ள காலி இடங்களில் வாகனங்களை நிறுத்த இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த இடங்களில் வாகனம் நிறுத்துவதற்கான தேவை அதிகரித்துள்ளது.

**8,000 வாகனங்கள்:** 45 கி.மீ தொலைவுக்கு அமைந்துள்ள மெட்ரோ ரயில் வழித்தடத்தில் உள்ள நிலையங்களில் தினசரி சராசரி 8,000 வாகனங்கள் நிறுத்தப்படுகின்றன. சில மெட்ரோ ரயில் நிலையங்களில் வாகனம் நிறுத்தம் செய்வதில் பிரச்னை இருப்பது மெட்ரோ ரயில் நிர்வாகத்துக்கு தெரியவந்தது. அங்கு வழக்கமாக வரும் பயணிகளுக்கு வாகனங்களை நிறுத்த இடமில்லாத நிலை ஏற்படுகிறது. வழக்கமான பயணிகளுக்கும் மாதாந்திர பாஸ் வைத்து இருப்பவர்களுக்கும் வாகன நிறுத்த இடமில்லாமல் சிரமப்படுகின்றனர். ஒரு சில இடங்களில் பயணம் செய்யாத அப்பகுதி வியாபாரிகள் ரயில்வே இடத்தில் 'பார்க்கிங்' செய்து வருகின்றனர். கார், மோட்டார் சைக்கிள் ஆகியவற்றை நிறுத்திவிட்டு சென்று வருகின்றனர். இவற்றை எல்லாம் முறைப்படுத்தும் வகையில் பார்க்கிங் கட்டணத்தை 'ஸ்மார்ட் கார்டு' மூலம் செலுத்தும் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

**விரைவில் தொடங்கப்படும்:** இது குறித்து மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரி ஒருவர் கூறியது:

இதை சோதனை முறையில் செயல்படுத்தியதில் ஒருசில குறைகள் இருப்பது தெரியவந்தது. அவற்றை சரிசெய்து அனைத்து ரயில் நிலையங்களிலும் 'ஸ்மார்ட் கார்டு' மூலம் பார்க்கிங் கட்டணம் செலுத்தும் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

பயணிகள் தற்போது மாதம் அல்லது தினசரி அடிப்படையில் டோக்கன் பெற்று வாகனத்தைநிறுத்துவதற்கு கட்டணம் செலுத்தும் முறை உள்ளது. இந்நிலையில், 'ஸ்மார்ட் கார்டு' மூலம் கட்டணம் செலுத்தும் திட்டத்தை செயல்படுத்தினால் பயணிகளுக்கு நேரம் மிச்சமாகும். இதுதவிர, மெட்ரோ ரயிலை பயன்படுத்தக்கூடிய பயணிகளுக்கு மட்டுமே பார்க்கிங் செய்யும் வாய்ப்புக் கிடைக்கும். 'ஸ்மார்ட் கார்டு' நடைமுறைப்படுத்தப்பட்டால் அந்த கார்டை வைத்திருப்பவர்கள் மட்டுமே வாகனத்தை உள்ளே கொண்டு வர முடியும். வாகன நிறுத்தும் பகுதிகளில் நிறுத்த முடியும். மற்றவர்கள் உள்ளே நிறுத்த முடியாது என்றார் அவர்.

**வாகன நிறுத்தம் மூலம் வருவாய் ரூ.58 லட்சம்:** மெட்ரோ ரயில் நிலையங்களில் உள்ள வாகன நிறுத்தங்களுக்கு வாடிக்கையாளர்கள் மத்தியில் வரவேற்பு அதிகரித்துள்ளதால், இங்குள்ள நிறுத்தங்கள் தினமும் நிரம்பி வழிகின்றன. இதன் மூலமாக மாதத்துக்கு சுமார் ரூ.58 லட்சம் வரை வருவாய் கிடைக்கிறது.

இதில், நாள் ஒன்றுக்கு ரூ.1.92 லட்சம் வருவாய் கிடைத்து வருகிறது. இதில், வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் உள்ள வாகன நிறுத்துமிடம் வருவாய் ஈட்டுவதில் முதலிடத்தில் உள்ளது. ஆலந்தூர், கோயம்பேடு ஆகிய மெட்ரோ ரயில் நிலையங்கள் முறையே இரண்டு, மூன்றாவது இடத்தில் உள்ளன.